**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை - திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ம் நாள் திங்கட் கிழமை
திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் ஆடி மாதம் 27 ம் நாள்
TNMY09-001689-2019

**OS.No. 232/2019**

தரங்கம்பாடி தாலுக்கா சீர்காழி முன்சீப், மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் கரைமேட்டு தெருவில் வசிக்கும் (லேட்) ரெத்தினசாமி படையாட்சி குமாரர் இந்து சிவமதம் 60 வயதுள்ள R.செல்வேந்திரன் .....வாதி

//எதிர்//

1) தரங்கம்பாடி தாலுக்கா சீர்காழி முன்சீப், மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் கரைமேட்டு தெருவில் வசிக்கும் (லேட்) ராமு படையாட்சி குமாரர் இந்து சிவமதம் 68 வயதுள்ள R.சின்னதுரை

2) தரங்கம்பாடி தாலுக்கா சீர்காழி முன்சீப், மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் கரைமேட்டு தெருவில் வசிக்கும் (லேட்) ராமு படையாட்சி குமாரர் இந்து சிவமதம் 60 வயதுள்ள R.பஞ்சமூர்த்தி

3) தரங்கம்பாடி தாலுக்கா சீர்காழி முன்சீப், மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் கரைமேட்டு தெருவில் வசிக்கும் (லேட்) ராமு படையாட்சி குமாரர் இந்து சிவமதம் 53 வயதுள்ள R.மோகனசுந்தரம் ..... பிரதிவாதிகள்

தாவா வழக்கு சொத்துக்களை வாதி தனக்காகவும், தனது சகோதர சகோதரிகளுக்காகவும் தனது வசத்தில் வைத்து அமைதியான முறையில் சாகுபடி செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அல்லது அவரது ஆட்களோ, அல்லது அவரது ஏஜெண்டுகளோ, சட்டப்படிக்கின்றி எவ்விதத்திலும் எவ்வித இடைஞ்சலும், இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது

இவ்வழக்கு தாக்கலான நாள் – 24.08.2018, 27.08.2018

இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கபட்ட நாள் – 27.08.2018

இவ்வழக்கின் வழக்குமூலம் 06.12.2004, 26.11,2008, 23.10.2009, 01.08.2018 மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் உற்பத்தி.

இவ்வழக்கின் நீதிமன்ற கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்குமாக ரூ.1000/- என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்றக்கட்டணமாக ரூ.30/- நீ.ம.க.ச பிரிவு 27(c) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 27.08.2018 அன்று O.S. No. 320/2018 என சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 01.11.2019 அன்று O.S. No.232/2019 என கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 05.08.2024ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.E. செல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்தும் போதிய வாய்ப்பளித்தும் பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் கடந்த 05.08.2024 அன்று பிரதிவாதிகளை தோன்றாத்தரப்பினராகக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## <u>தீர்ப்பாணை</u>

1. தாவா வழக்கு சொத்துக்களை வாதி தனக்காகவும், தனது சகோதர சகோதரிகளுக்காகவும் தனது வசத்தில் வைத்து அமைதியான முறையில் சாகுபடி செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அல்லது அவரது ஆட்களோ, அல்லது அவரது ஏஜெண்டுகளோ சட்டப்படிக்கின்றி எவ்விதத்திலும் எவ்வித இடைஞ்சலும், இடையூறும் செய்யக்கூடாது என வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு அளித்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

2. செலவுத்தொகையில்லை.

**<u>சொத்துவிபரம்</u>**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஆவண பதிவு மாவட்டம், செம்பனார்கோவில் சார் பதிவகம், தரங்கம்பாடி தாலுக்கா, மேலப்பெரும்பள்ளம் வட்டம் மற்றும் கிராமத்தில்

<u>முதல் அயிட்ட சொத்து</u>

1) R.S.No. 111/2-ல் புஞ்சை 0.27 செண்ட் பூரா

2) R.S.No. 113/13-ல் புஞ்சை 0.5 செண்ட் பூரா

ஆக மொத்தம் 0.32 செண்ட் ஆகும்.

<u>II -வது அயிட்ட சொத்து</u>

1) R.S.No.216/3-ல் நஞ்சை கீழ்புறம் மொத்தம் 0.43 செண்ட்

<u>நான்கெல்லைகள்</u>

வடக்கில் கதிர்வேல் வகையறா நஞ்சை, மேற்கில் பிரதிவாதிகள் நஞ்சை (3-வது அயிட்டம்) தெற்கில் கனிகண்ணன் நஞ்சை, கிழக்கில் ரெத்தினசாமி வகையறா நஞ்சை இதற்குள்பட்டது.

<u>III -வது அயிட்ட சொத்து</u>

R.S.No.116/3ல் நஞ்சை மேல்புறம் மொத்தம் 0.32 ¼ செண்ட்

<u>நான்கெல்லைகள்</u>

வடக்கில் கதிர்வேல் வகையறா நஞ்சை, மேற்கில் ரெத்தினசாமி நஞ்சை, தெற்கில் கனிகண்ணன் நஞ்சை, கிழக்கில் வாதி நஞ்சை ( 2-வது அயிட்டம்) இதற்குள்பட்டது.

<u>IV -வது அயிட்ட சொத்து</u>

R.S.No 127/17 நஞ்சை கீழ்புறம் 0.33 செண்ட்

<u>நான்கெல்லைகள்</u>

வடக்கில் ரெத்தினசாமி நஞ்சை, தெற்கில் கன்னி, மேற்கில் ரெத்தினசாமி புஞ்சை கிழக்கில் ரோடு இதற்குள்பட்டது.

செலவு விவரப்பட்டியல்

செலவுத்தொகை பட்டியல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு செலவுத்தொகையானது ரூ. 740 /- ஆகும்.

| விபரப்பட்டியல் | ரூ. |
|---|---|
| வழக்குரை நீதிமன்ற கட்டணம் | 30/- |
| வக்காலத்து | 10/- |
| தட்டச்சு கட்டணம் | 200/- |
| வழக்கறிஞர் கட்டணம் | 500/- |
| கூடுதல் | 740/- |

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் நாள் இடப்பட்டது.

(ஒப்பம்) P. கனிமொழி,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.

// உண்மைநகல் //

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி